Koviloor Digital Library

உ ஓம் சிவ சக்தி துணை

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாணிபதம் நாடு

A.No: 27744
Q25









மகான் துர்க்கைச் சித்தர் திருவாய் மலர்ந்தருளிய

ஸ்ரீ காளிகாம்பாள் கவசம் எனும்

ஸ்ரீ காமாக்ஷி சிந்தாமணி

வெளியீட்டாசிரியர்:

சிவாச்சார்யகுல திலகம் சிவாகம சாஸ்திர நிபுணர்
உயர்திரு. தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் அவர்கள்
67, தம்புசெட்டித் தெரு, சென்னை. 600001

Koviloor Digital Library

உ ஓம் கணபதி




உ ஓம் சக்தி

உ ஓம் பராசக்தி



Koviloor Digital Library



உ ஓம் சக்தி

ஸ்ரீ காமாக்ஷி அருள்

ஸ்ரீ துர்க்கா தேவியின் அருளைப் பெற்ற ஸ்ரீ துர்க்கைச் சித்தரால் பாடப் பெற்ற ஸ்ரீ காளியம்மன் கவசம். இது சிறந்த மந்திர கவசமாகும்.

மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் பொருமையாலும் எதிர்ப்பு மனத்தாலும் மற்றவர்களுக்கு தீங்கு செய்து விடுகின்றனர். இப்படித் தீங்கிழைப்பவர்கள் மனத் தாலும் மந்திரத்தாலும் உரிய வழியை நாடுகின்றனர். தீமை செய்தவர்கள் பலனை அனுபவிப்பார்கள் என்றாலும் எய்த அம்பு தைத்த இடம் வலிக்காமல் போவதில்லை. தெய்வ அருள் இருந்தால் இதிலிருந்து தப்பிவிடலாம்.

இந்தக் கவச நூல் பல்வேறு வகைப்பட்ட மாயங்களைக் கூறி அவைகளைக் கட்டுகிறது. நெஞ்சத்திற்கு நல்ல வலுவைத் தருகிறது தம்மைத் தாக்க வரும் துன்ப ஒலிகளைத் தடுத்து நிற்கிறது. கீர்த்திக்குவிதை போடும் அசுவாரூடா போன்ற மந்திரஒலிகளை இதனுள் ஒளிவிடக் காணலாம்.

Koviloor Digital Library

தமிழ் மட்டுமே அறிந்த அடியவர்களுக்கு இது ஒரு பாதுகாப்பு. இதை அதிகாலையிலும் பணிகளை நோக்கிச் செல்லும்போதும் படிப்பது நல்லது.

அஷ்டமியில் படித்தால் துன்பங்கள் விலகும். மங்களவாரத்தில் திருவிளக்கின் முன்பு பெண்கள் படித்தால் மங்கலியச் செல்வம் மேலும் கூடும். இதை காளியம்மன் சன்னதிகளில் படிப்பது மிகவும் லாபமாகும். இதைப் படிப்பவர்களுக்கும் படிக்கச் சொல்லிக் கேட்பவர்களுக்கும் எல்லா மங்களங்களும் சித்திக்க ஸ்ரீ காமாக்ஷி தேவியான காளியம்மனை தியானிக்கிறேன்.

தி. ஷ. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்
ஆகம ஆசிரியர்
ஆச்சாரிய குலபூஷண ஸ்ரீ காளிகாம்பாள் கமடேசுவரர்
ஆலய அத்யக்ஷ்கர்
67, தம்புசெட்டித் தெரு, சென்னை.

அபிராமி அந்தாதி

தனந்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும்அன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள்அபி ராமி கடைக்கண்களே.

Koviloor Digital Library

உ ஓம் ஸ்ரீ ஜெய துர்க்கா

1 அழகுச் செல்வி

பொன் மின்னு மேனியில் பொலிவுற்ற நகைபல
பொருந்த நீவந்து நின்ருய்
அன்புற்று உன்னடி அண்டினேர் அகத்தினில்
அருகினில் அமர வந்தாய்
இன்புற்று வாழ்ந்திட இனிய நற்சுகம் நல்க
இன்று நீ இங்கு வந்தாய்
உன்பற்றுக் கொண்டவர் உண்மையாய் உயர்ந்திட
உடனேடி யோடிவந்தாய்
கன்னலின் மொழியாளே களிசிந்து விழியாளே
கற்பகச் சோலைக் கிளியே
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித் தாயே.

KOVILOOR MADALAYAM
KOVILOOR 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE : ...-43846)

3-4

Koviloor Digital Library

உ ஓம் ஜெய துர்க்கா

2 குடும்பப் பெருமை

மயில் மீது வந்திடும் மகனையே தந்தெமை
மகிழ்வுறச் செய்த தாயே
பயில்கின்ற பாரதப் படர்கின்ற கதையினைப்
பரிசிட்ட கரியன் தாயே
துயில்கின்ற அரங்கனைத் தமையனாய்ப் பெற்றநீ
துயரற்ற வாழ்வு மானாய்
கயல் துள்ளு விழியதால் கண்மூன்று கொண்டவன்
கமலையுன் காதற் கேங்கி
ஜெய ஜெய யென்றுஉன் செறிபுகழ் பாடவும்
செம்மணி சிவனைச் சேர்ந்தாய்
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித் தாயே.

Koviloor Digital Library

உ ஓம் ஜெயதுர்க்கா

3 வேத மொழியாள்

நால்வேத மொழியினை நாள்தோறும் பழகிடும்
நான் மறையாளர் மொழியில்
பால்போலும் தயிர்போலும் பாங்கான நவநீதப்
பாகமாய் நின்று நித்தம்
ஆல்போலும் படர்ந்திட்டு; வேல் போலும் நிமிர்ந்திட்டு
ஆதவன் ஒளியும் தந்து
சூல்உற்ற சொற்களைச் சூத்திரமொழிகளைச்
சூழ்பவர் தமக் குரைத்து
கோல் இட்ட கொடியொடு கோலோச்சி நின்றுமுக்
கோணத்தில் நின்ற குயிலே
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித் தாயே.

Koviloor Digital Library

உ ஓம் ஸ்ரீ ஜெய துர்க்கா

4 வாழ்வளிக்கும் தாய்

திலகமிடும் நெற்றியோடு திருமிகுந்த வாழ்க்கையொடு
திருவாட்டியான பெருந்தாயாகி
உலகிலுயர் வாழ்வளித்து உன்னதமாம் நிலையளித்து
உயிரெனவே உரைகின்ற உமையவளே;
கலகமிடும் கசடு மனம் கறுகுகின்ற கனலாகி
கருணைமிகப் பொழிகின்ற கன்னியளே
அலகில் நலம் அளிப்பதற்கு அன்னையென அருகழைத்து
அருளாட்சி செய்கின்ற அம்மணியே
கலகலவென்றிசை பாடிக் கனிந்து வருகாவிரியே
கண்மணியே கனங்குழையே கனிதமிழே
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித் தாயே.

Koviloor Digital Library

உ ஓம் ஸ்ரீ ஜெய துர்க்கா

5 சிந்தால மறுக்கும் சிந்தாமணி

சிந்தாநல் மாமணியே சிந்துரத்தின் பொட்டணிந்த
சிற்பரையே சிவமணியே என்னுடைய
சிந்தாகுல மறுத்துச் சிறப்புடைய வாழ்வளித்துச்
சிரியென்று என்முகத்தில் சிரிப்பேற்றி
வந்தாரும் போவாரும் வருவாரும் வளம் பெறவே
வகை வகையாய் வாரிவிடத் தனமளித்து
மந்தாரை மலரணிந்த மனமகளே மங்கலையே
மகிழ்ச்சி தருவான் ஊற்றே மங்கலியக்
கந்தப் பொடிமணக்கு மேனியளே மேன்மைதரு
கந்தப்பன் தாயான கவிமணியே
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித் தாயே.

Koviloor Digital Library

உ ஓம் ஸ்ரீ ஜெய துர்க்கா

6 நடமாடும் மயில்

எண்ணத்தின் வடிவாகி எண்ணமும் தானுகி
எழுந்த நல் எழுச்சியாகி
மண்ணதன் விழைவாகி மண்ணுமே தானுகி
மலர்ந்தநல் மகிழ்ச்சியாகி
விண்ணதின் முகிலாகி விண்ணுமே தானுகி
விரிந்தநல் மழையுமாகி
பண்ணதின் சுவையாகி பண்ணுமே தானுகி
பரிந்தநல் இசையு மாகிக்
கண்ணதின் ஒளியாகிக் கண்ணுமே தானுகிக்
கண்முனே நடமாடு மயிலே
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித் தாயே

Koviloor Digital Library

உ ஓம் ஸ்ரீ ஜெய துர்க்கா

7 தருமத்தின் சென்னை வந்தாய்

சங்கரன் உடலினில் சரிபாதி பெற்றனை
சகலமும் அறிந்த தாயே
பொங்கிடு புகழ் தரப் பொன்னொடு பொருள்தரப்
பொலிவுற்ற எழுந்த தாயே
நங்கையர் நடித்திட நற்றவர் துதித்திட
நலங்களே நிறைந்த தாயே
மங்களை தானுகி மன்மதபாணியாய்
மலரம்பு கரும்பு மேந்தி
தங்கிடத் தலம்பல தரணியில் இருப்பினும்
தருமத்தின் சென்னை நின்ருய்
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித் தாயே!

Koviloor Digital Library

உ ஓம் ஸ்ரீ ஜெய துர்க்கா

8 குல மக்கள் செல்வம்

மயிலாகி மானுகி மலரிலே சுரக்கின்ற
மனத் தேனின் சுவையுமாகி
குயிலாகிக் குரலாகி குறைவற்று வருகின்ற
குலமக்கள் செல்வமாகி
பயில்கின்ற தமிழாகிப் பண்டிதர் குரலாகி
பண்பாகிப் பழமையாகி
உயிராகி உடலாகி உண்மையது உந்துகின்ற
உயிர்ப்பாகி உணர்வு மாகி
கயிராகிப் பம்பரமாம் ககன மதைச் சுற்றுகின்ற
கலையினிலே தேற்வுற்ற கனியே
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித் தாயே.

Koviloor Digital Library

உ ஓம் ஸ்ரீ ஜெய துர்க்கா

9 அண்டர் தேடிய திருவடியாள்

பண்டிதையாகி நீ பண்டைநாள் தோன்றி
பழநூலின் பாடஞ் சொன்னுய்
மண்டிய பவங்களை மக்குறு அவங்களை
மண்ணினில் மடித்து நின்றுய்
நண்டெனப் பொந்தினில் நலிவுற்று என்மனம்
நகைப்புற்று மறைந்தபோது
அண்டரும் தேடி அருளடி இரண்டையும்
அன்னை நீ எனக்குக் காட்டி
கண்டவுன் கழலதில் கவலைகள் தன்னேடு
கசடையும் கரைச் செய்தாய்
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்றிடும்
கருணைக் காமாட்சித் தாயே.

திருத்தம்

மண்டிய பவங்களை மயக்குறு அவங்களை

அண்டரும் தேடிய அருளடி இரண்டையும்
கசடையும் கரையச் செய்தாய்

Koviloor Digital Library

உ ஓம் ஸ்ரீ ஜெய துர்க்கா

10 கன்னிக் குயில்

தில்லையில் அன்றுநீ திந்திமித்தோமெனத்
திருவான நடனமிட்டாய்
எல்லையில் மலைமகள் எழிற்திருமகளதாய்
எழுத்தெண்ணு கலையளாகி
தொல்லைதீர் துணையாகித் தொட்டிடும் மகளாகித்
தொலைவுற்று அருகுமாகி
இல்லைநீ என்பவர் இருந்திடும் இடத்திலும்
இனிதாகி இலங்கி எங்கள்
கொல்லையில் விழைந்த நல்கொய்யாத பழமாகிக்
குளிர்கின்ற கன்னிக் குயிலே
கடல்ஆடு சென்னையில் கவிபாடி நின்ருடும்
கருணைக் காமாட்சித் தாயே.

Koviloor Digital Library

உ ஓம் சக்தி

ஸ்ரீ துர்கா-ஸப்த ச்லோகி

ஜ்ஞானினமபி சேதாம்ஸி தேவீ பகவதீ ஹி ஸா।
பலாதாக்ருஷ்ய மோஹாய மஹாமாயா ப்ரயச்சதி ॥ 1 ॥

துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதி-மசேஷஜந்தோ:
ஸ்வஸ்தை: ஸ்ம்ருதா மதி-மதீவ சுபாம் ததாஸி

தாரித்ர்ய-து:க்க-பயஹாரிணி கா த்வதன்யா
ஸர்வோபகார-கரணய ஸதார்த்ர-சித்தா ॥ 2 ॥

ஸர்வமங்கல-மங்கல்யே சிவே ஸர்வார்த்த-ஸாதிகே।
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோऽஸ்துதே ॥ 3 ॥

சரணகத-தீனர்த-பரித்ராண-பராயணே।
ஸர்வஸயார்தி-ஹரே தேவி நாராயணி நமோऽஸ்துதே ॥ 4 ॥

ஸர்வஸ்வரூபே ஸர்வேசே ஸர்வசக்தி-ஸமன்விதே।
பயேப்யஸ்-த்ராஹி நோ தேவி துர்கே தேவி நமோऽஸ்துதே ॥ 5 ॥

ரோகா-னசேஷா-னபஹம்ஸி துஷ்டா
ததாஸி காமான் ஸகலா-னபீஸ்டான் ।
த்வாமாச்ரிதானம் ந விபந்நராணம்
த்வாமாச்ரிதா ஹ்யாச்ரயதாம் ப்ரயாந்தி ॥ 6 ॥

ஸர்வா-பாதா-ப்ரசமனம் த்ரைலோக்யஸ்யாகிலேச்வரி ।
ஏவமேவ த்வயா கார்ய-மஸ்மத்-வைரிவிநாசனம் ॥ 7 ॥

இவ்வேழு சுலோகங்கள் "தேவீ மாஹாத்மிய" த்தில் 1.55; 4.17; 11.10; 11.12; 11.24; 11.29; 11.39; சுலோகங்களாக உள்ளன. இவை மிகவும் அருட்சக்தி பொருந்தியனவாகும். "தேவீ மாஹாத்திய" த்தில் மொத்தமுள்ள 700 மந்திரங்களின் சாரம் இவ்வேழு சுலோகம் என்பர். இத்துதியை ஏழுமுறை ஜபிப்பது ஆன்ருேர் வழக்கம்.

Koviloor Digital Library

உ ஓம் சக்தி

'ஸ்ரீ துர்கா ஸப்த ச்லோகீ' யின் கருத்துரை

மகாமாயையான பகவதி தேவி ஞானியரின் சித்தங்களையும் பலவந்தமாக இழுத்து மோகத்தில் செலுத்துகிருள். (1)

கடத்தற்கரிய துன்பத்தில் ஸ்மரிக்கப்பட்டால், (அல்லது துர்கே! உனை ஸ்மரித்தமாத்திரத்தில்) சகலப் பிராணிகளின் அச்சத்தையும் போக்குகிருய். இன்பநிலையில் இருந்து கொண்டு ஸ்மரிக்கப்பட்டால், பரம மங்களமான நல்லறிவை நல்குகிருய். வறுமை, துன்பம், பயம், ஆகியவற்றை நீக்குபவளே! ஸகலருக்கும் ஸர்வ உபகாரங்களையும் செய்வதற்காக ஸதாகாலமும் நினைந்துருகிய நெஞ்சுடையவர் உனையன்றி எவர் உண்டு? (2)

மங்கள வஸ்த்துக்கள் அனைத்திலும், அனைத்தினும் பரம மங்களமானவளே! மங்களமே வடிவான சிவனின் சக்தியே! சகல புருஷார்த்தங்களையும் சாதித்துத் தருபவளே! சரணாகத நிலையமே! முக்கண் படைத்த (அல்லது மும்மூர்த்தியருக்கும் அன்னையான) திரியம்பகியே! வெண்பொற் ஜோதியாம் கௌரீ! நரருக்கெல்லாம் ஆசிரயமாம் நாராயணீ! நினக்கு நமஸ்காரம். (3)

'சரண்' என வந்த தீனரையும், துன்புற்ரோரையும் அருமையுடன் காப்பதையே தொழிலாகக் கொண்ட தேவீ! அனைவரின் இன்னலும் நீக்கும் நாரணீ! நினக்கு நமஸ்காரம். (4)

காணும் உருவனைத்தும் நீயே! அனைத்தையும் ஆளும் தேவி நீயே! அனைத்தின் சக்தியும் ஒன்றிய இடம் நீயே! தேவி துர்கே! உனக்கு வந்தனம்! எங்களை அச்சங்களினின்று ரட்சித்தருள்வாய்! (5)

நீ திருப்தியின்பம் கொண்டால் சகல ரோகங்களையும் அறவே அகற்றுகிருய்; கோரும் ஆசையனைத்தையும் நிறைவித்தருள்கிருய். உனை அரண்கொண்ட நரருக்கு இடர் என்பதே இல்லை. அவர்களே பிறருக்கு அரணாகின்றனர் அன்ரோ? (6)

அகிலாண்டேசுவரீ! உன்ஞல் எமது பகைவர்கள் அழிக்கப் பெற வேண்டும். இவ்வாறே மூவுலகிலும் உள்ளவர்களின் சகல துன்பங்களையும் நீ அடியோடு சமனம் செய்தருள வேண்டும் (7)

--மங்களம்--

Koviloor Digital Library

உ ஓம் சக்தி

ராகம் - பிலஹரி

பல்லவி

பக்தியினாலே - தெய்வ - பக்தியினாலே

சரணங்கள்

1. பக்தியினாலே - இந்தப் பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடி!
சித்தந் தெளியும், இங்கு செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்,
வித்தைகள் சேரும், – நல்ல வீர ருறவு கிடைக்கும், மனத்திடைத்
தத்துவ முண்டாம், நெஞ்சிற் சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும் (பக்தி)

2. காமப் பிசாசைக் - குதி கால்கொண் டடித்து விழுத்திடலாகும்; இத்
தாமசப் பேயைக் - கண்டு தாக்கி மடிந்திட லாகும்; எந் நேரமும்
தீமையை எண்ணி - அஞ்சுந் தேம்பற் பிசாசைத் திருகியெ றிந்துபொய்
நாம மில்லாதே - உண்மை நாமத்தி னாலிங்கு நன்மை விளைந்திடும் (பக்தி)

3. ஆசையைக் கொல்வோம், - புலை அச்சத்தைக் கொன்று பொசுக்கிடுவோம், கெட்ட
பாச மறுப்போம், - இங்கு பார்வதி சக்தி விளங்குதல் கண்டதை
மோசஞ் செய்யாமல் - உண்மை முற்றிலுங் கண்டு வணங்கி வணங்கியோர்
ஈசனைப் போற்றி - இன்பம் யாவையு முண்டு புகழ்கொண்டு வாழ்குவம். (பக்தி)


Koviloor Digital Library

4. சோர்வுகள் போகும், - பொய்ச் சுகத்தினைத் தள்ளிச் சுகம்பெறலாகும், நற்
பார்வைகள் தோன்றும் - மிடிப் பாம்பு கடித்த விஷமகன் றேநல்ல
சேர்வைகள் சேரும், பல செல்வங்கள் - வந்து மகிழ்ச்சி விளைந்திடும்,
தீர்வைகள் தீரும் - பிணி தீரும் பலபல இன்பங்கள் சேர்ந்திடும். (பக்தி)

5. கல்வி வளரும் - பல காரியங் கையுறும், வீரிய மோங்கிடும்,
அல்லலொழியும், - நல்ல ஆண்மை யுண்டாகும், அறிவு தெளிந்திடும்,
சொல்லுவதெல்லாம் - மறைச் சொல்லினைப் போலப் பயனுள்ள தாகும், மெய்
வல்லமை தோன்றும், - தெய்வ வாழ்க்கையுற் றேயிங்கு வாழ்ந்திடலாம் - உண்மை. (பக்தி)

6. சோம்ப லழியும் - உடல் சொன்ன படிக்கு நடக்கும், முடி சற்றுங்
கூம்புத லின்றி - நல்ல கோபுரம் போல நிமிர்ந்த நிலைபெறும்,
வீம்புகள் போகும் - நல்ல மேன்மை யுண் டாகிப் புயங்கள் பருக்கும், பொய்ப்
பாம்பு மடியும் - மெய்ப் பரம் வென்று நல்ல நெறிகளுண் டாய்விடும், (பக்தி)

7. சந்ததி வாழும், - வெறுஞ் சஞ்சலங் கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்
'இந்தப் புவிக்கே - இங்கொர் ஈசனுண்டா யின் அறிக்கையிட் டேனுன்றன்
கந்தமலர்த்தாள் - துணை; காதல் மகவு வளர்ந்திட வேண்டும், என்
சிந்தை யறிந்தே - அருள் செய்திடவேண்டும், என்றால் அருளெய்திடும். (பக்தி)



Koviloor Digital Library

உ ஓம் சக்தி

தேசமுத்துமாரி

ஓம் தேடி உன்னைச் சரணடைந்தேன் தேச முத்துமாரியம்மா தேசமுத்துமாரி
கேடதனை நீக்கிடுவாய் கேட்டவரந் தருவாய் அம்மா கேட்டவரந் தருவாய்
பாடி உனைச் சரணடைந்தேன் பாசமெல்லாம் களைவாய் அம்மா பாசமெல்லாம் களைவாய்
கோடிநலம் செய்திடுவாய் குறைகளெல்லாம் தீர்ப்பாயம்மா குறைகளெல்லாம் தீர்ப்பாய்
எப்பொழுதும் கவலையிலே இணங்கி நிற்பான் பாவி அம்மா இணங்கி நிற்பான் பாவி
ஒப்பி உனதேவல் செய்வேன் உனதருளால் வாழ்வேன் அம்மா உனதருளால் வாழ்வேன்
சக்தியென்று நேரமெல்லாம் தமிழ்க்கவிதைபாடி அம்மா தமிழ்க்கவிதை பாடிப்
பக்தியுடன் போற்றி நின்றால் பயமனைத்தும் தீருமம்மா பயமனைத்தும் தீரும்.
ஆதாரம் சக்தியென்றே அருமறைகள் கூறும் அம்மா அருமறைகள் கூறும்
யாதானும் தொழில்புரிவோம் யாதும் அவள் தொழிலாம் அம்மா யாதும் அவள் தொழிலாம்
துன்பமே இயற்கை யெனுஞ் சொல்லை மறந்திடுவோம் அம்மா சொல்லை மறந்திடுவோம்
இன்பமே வேண்டி நிற்போம் யாவுமவள் தருவாளம்மா யாவுமவள் தருவாள்
நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு அம்மா நான்கு மறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம் அம்மா அதிக வரம் பெறலாம்
தேடி உன்னைச் சரணடைந்தேன் தேச முத்துமாரியம்மா தேசமுத்துமாரியம்மா
கேடதனை நீக்கிடுவாய் கேட்டவரந் தருவாய் அம்மா கேட்ட வரந் தருவாய்

– வரகவி சுப்பிரமணிய பாரதியார்

உ ஓம் சிவசக்தி துணை

Koviloor Digital Library

ஜெய் துர்க்கா

காளி காம்பாள் கவசமெனும்
ஸ்ரீ காமாக்ஷி சிந்தாமணி

பெரிய நாயகி கிருபையால் தருமம் தழைத்தோங்க அறம் உலகை ஆளுகிறது.

ஓம் சங்நாரி சங்நாரி தமிழில் வல்லவளே ஆயன் மீதிலமர்ந்திருந்தவளே என் நாவில் நின்று நடனம் புரி அம்மாவது வது வால வாசனையும் அப்பூர் சிவாய உதாமன சரஸ்வதி என் நாவிலே நின்று விளையாடவே சுவாகா உன் உள்ளத்தினுள் பேரார்வத்துடன் அன்பிற் குறிய சௌந்தரநாயகி அன்னையை வீற்றிருக்கச் செய்வாயாக.

நாவு ஒன்று நீங்கலாக ஏனைய யாவையும் ஒழித்துவிடு. தாயே, தாயே என்று இயம்புதற்கு அதை வைத்துக்கொள்.

ஓம் தாயே, வாகீசுவரியே, சுயம்பூவே என்நாவில் வாக்காக எழுந்து அருள்வாயாக.

என்பிராண சந்திரிகையே, என் உயிருக்குயிரே தாயே இடிமுழக்கத்தில் ஒலிப்பவளே, காளீ, கால சொரூபிணி, எல்லாம் வல்லவளே, ஆதிசக்தியே என்னுள் எழுந்து அருள்வாயாக ஓம் சக்தி.

(- சுவாமி விவேகானந்தா)

சமர்ப்பணம்:

சென்னை தம்புசெட்டித் தெருவில் எழுந்தருளி இருக்கும் காமாக்ஷி அம்பிகை மீது மகான் துர்க்கைச் சித்தர்பாடியருளிய காமாக்ஷி சிந்தாமணி எனும் ஸ்ரீ காளி காம்பாள் கவசத்தை புத்தக ரூபமாக அச்சியற்றி அவ்வாலய அத்யக்ஷ்கர் சிவாச்சாரிய குல பூஷணம் சிவாச்சாரியார் குல திலகம் ஆகம ஆசிரியர் தவத்திரு. தி. ச. சாம்ப மூர்த்தி சிவாச்சாரியார் சுவாமிகளுக்கு எனது அன்பு காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன்.
நாடு வாழ நாமும் வாழுவோம்.

அன்பன் திரு. மு. கி. முத்துராமலிங்கம் பிள்ளை,
M. K. Muthuramalingam Pillai,
Bojana Korada Factory 10-12, 283 A Convent Road,
P. O. Box. 79, Taiping. Malaysia. Phone 822579

அச்சிட்டோர்: சண்முகா அச்சகம், 64A சிம்பாங் கார்டன் சிம்பாங் தைப்பிங்.